புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி அலுவலகத்தில் 02.06.2026ஆம் நாளன்று நடைபெற்ற சாதாரண கூட்டத்தின் தீர்மான நகல்

பொருள் எண்.01

பவானிசாகர் ஊராட்சி ஒன்றிய கட்டுப்பாட்டிலிருந்து இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இயங்கி வந்த 2 ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளிகள் மற்றும் 1 ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி என மூன்று பள்ளிகளும் ஆணையாளர், பவானிசாகர் ஊராட்சி ஒன்றியம் அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.2805/2022/அ2 நாள்.13.10.2022-ன் படி புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டது. ஒப்படைக்கப்பட்ட விவரம் பின்வருமாறு.

வ.எண்	பள்ளிகளின்பெயர்
1	ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி, ஜவஹர் மெயின் ரோடு, புன்செய்ப் புளியம்பட்டி
2	ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி, இராமநாதபுரம், புன்செய்ப் புளியம்பட்டி
3	ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, ஜெ.ஜெ.நகர், புன்செய்ப்புளியம்பட்டி

தமிழ்நாடு ஆரம்பகல்வி சட்டம் 1920 பிரிவு 34-ல் அரசின் முன்அனுமதியுடன் நகர்மன்றங்கள் சொத்துவரியுடன் கல்விவரி விதிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. அதன் விகிதத்தினை பிரிவு35 (1)-ல் சொத்துக்களின் ஆண்டு மதிப்பில் 5 விழுக்காட்டிற்கும் மிகாமல் விதிப்பு செய்ய வரையறை செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998 (திருத்தம்) 2022 நகர்புற உள்ளாட்சிகளில் 12.04.2023 முதல் நடைமுறைபடுத்தப்பட்டு வருகிறது. அதில் பிரிவு 80ல் நகர்மன்றங்கள் கல்வி வரி விதிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.. எனவே பிரிவு 91-ல் சொத்து வரி ஆண்டு விகிதத்தில் 5% மிகாமல் விதிப்பு செய்ய வரையறை செய்யப்பட்டுள்ளது. இந்நகர்மன்ற தீர்மான எண்.203, நாள்.12.02.2024-ல் கீழ்க்கண்டவாறு சொத்துவரி விகிதாச்சாரம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

1	பொதுக்காரியங்களுக்காக	2.50%
2	தண்ணீர் மற்றும் வடிகாலுக்காக	6.00%
3	விளக்குகளுக்காக	2.00%
4	துப்புரவுக்காக	2.50%
5	கல்வி வரி	2.50%
	மொத்தம்	15.50%

மேற்கண்ட விகிதாச்சாரத்தில் நூலக வரி விடுபட்டுள்ளதால் மேற்கண்ட தீர்மானத்தை ரத்து செய்ய அனுமதி தேவைப்படுகிறது. மேலும், இந்நகராட்சியில் வசூலிக்கப்படும் சொத்துவரியுடன் உரிய திருத்திய சதவீத நிதிக்கூறினை (Component) கல்விநிதிகணக்கில் நிர்ணயம் செய்யப்பட வேண்டிய விவரம் பின்வருமாறு.

1	பொதுக்காரியங்களுக்காக	7.00%
2	தண்ணீர் மற்றும் வடிகாலுக்காக	5.00%
3	நூலக வரி	1.00%
4	கல்வி வரி	2.50%
	மொத்தம்	15.50%

எனவே, 01.04.2026 ஆம் தேதி முதல் சொத்துவரியில் நிர்ணயம் செய்யப்பட்ட சொத்துவரி சதவீத நிதிக்கூறில் மேற்கண்டவாறு மாற்றம் செய்ய (Component) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்.823/2023/அ1)

அலுவலகக்குறிப்பு :–

அ) மன்றம்அனுமதிக்கலாம்.

தீர்மான எண் : 397

தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது

பொருள் எண்.02

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்ட கடையின் குத்தகை 31.03.2026 உடன் மூன்றாம் தொகுப்பு காலம் முடிவடைவதால் 01.04.2026 முதல் 15% வரியை உயர்வு செய்து வாடகை தொகையினை கணினியில் கேட்பு எழுப்பவும், கடையின் உரிமத்தினை புதுப்பிக்கவும், மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

வ. எ ண்	வரி விதிப்பு எண்	கடை விவரம்	உரிமையாளர் பெயர்	நீட்டிப்பு செய்யப்ப டும் குத்தகை காலம்	ஏற்கன வே உள்ள வாடகை	15% உயர்வு செய்த தொகை
1	2	3	4	5	6	7
1	060/2017004	திரு.வி.க திடல் வணிக வளாக கடை எண்.4	A.வேலவன்	01.04.2026 முதல் 31.03.2029	12196	14025 + GST
2	060/2017014	பேருந்து நிலைய வணிக வளாக கடை எண்.14	M.கோபால கிருஷ்ணன்	01.04.2026 முதல் 31.03.2029	11903	13688 + GST
3	060/20170015	பேருந்து நிலைய வணிக வளாக கடை எண்.15	M.கோபால கிருஷ்ணன்	01.04.2026 முதல் 31.03.2029	11903	13688 + GST
4	060/20170017	பேருந்து நிலைய வணிக வளாக கடை எண்.17	A.ரவிச்சந்திரன்	01.04.2026 முதல் 31.03.2029	11241	12927 + GST

(ந.க.எண்.1135/2015/அ1)

அலுவலகக்குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண் : 398

தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது

பொருள் எண்.03

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்ட குத்தகை இனங்கத்திற்கு இரண்டாம் ஓராண்டு குத்தகை காலம் 31.03.2026 முடிவடைவதால் 01.04.2026 முதல் 5% வரியை உயர்வு செய்து வாடகை தொகையினை கணினியில்

கேட்பு எழுப்பவும், கடையின் உரிமத்தினை புதுப்பிக்கவும், மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

வ. எ ண்	வரி விதிப்பு எண்	கடை விவரம்	உரிமையாளர் பெயர்	நீட்டிப்பு செய்யப்படு ம் குத்தகை காலம்	ஏற்கன வே உள்ள வாடகை	5% உயர்வு செய்த தொகை
1	2	3	4	5	6	7
1	060/BD01/00 139	வாரச்சந்தை	K.சுரேஷ்	01.04.2026 முதல் 31.03.2027 வரை	49,67,55 0	52,15,92 8

(ந.க.எண்.825/2023/அ2)

அலுவலகக்குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண் : 399

தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது

<u>பொருள் எண்.04</u>

இந்நகராட்சியில் 2025-2026ஆம் ஆண்டுக்குரிய இயல்புநிலை கணக்குகளை வருவாய் நிதி மற்றும் குடிநீர் நிதி கணக்கு முடிக்க துணை பதிவேடுகள், சொத்துவரி, தொழில்வரி, குடிநீர் கட்டணம், குத்தகை இனம், அச்சம் மற்றும் அருவருக்கதக்க பதிவேடு (D&O), முன்பண பதிவேடு மற்றும் வைப்புத்தொகை பதிவேடுகளின் கணக்குகளை ஆண்டு கணக்குகளுடன் ஒப்பீடு செய்தும், நகராட்சியில் பராமரிக்கப்படும் செலவின பதிவேடுகள் மற்றும் வங்கி கைச்சாத்து புத்தகத்துடன் இணக்கம் செய்ய வேண்டியுள்ளது.

மேற்கண்டவாறு கணக்குகளை முடித்து உள்ளாட்சி நிதித்தணிக்கை துறையின் தணிக்கைக்கு சமர்பிக்க வேண்டியுள்ளது. அதற்கான உத்தேச செலவினம் ரூ.1,55,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்.300/2020/பி1)

அலுவலகக்குறிப்பு :-

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமுலில் இருந்த காரணத்தாலும், தேர்தலின்போது தணிக்கை ஆரம்பிக்கப்பட்ட காரணத்தாலும், தேர்தல் நடத்தை விதிமுறைகளில் தளர்வுகள் அளிக்கப்பட்டபின் கடந்த 16.04.2026 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் திரு.பி.தமிழரசு - ரூ.1,50,000/-, திருமதி.ஆர்.சித்ராதேவி - ரூ.1,56,000/- மற்றும் திரு.பி.வேல்முருகன் - ரூ.1,60,000/- ஆகிய விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. 2025-2026ஆம் ஆண்டுகணக்குகளை முடித்து உள்ளாட்சி நிதித்தணிக்கைத்துறைக்கு சமர்பிக்க வேண்டியுள்ளதால் பணியின் அவசர அவசியம் கருதி வரப்பெற்றுள்ள விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி வழங்கியுள்ள திரு.பி.தமிழரசு - ரூ.1,50,000/- என்பவருக்கு பணி உத்தரவு வழங்கி பணி மேற்கொண்டதை மன்றத்தின் பின்னேற்பிற்கு வைக்கப்படுகிறது. மன்றம் ஏற்கலாம்.

தீர்மான எண் : 400

தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது

பொருள் எண்.05

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் 18 வார்டுகளில் அமைந்துள்ள வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்களில் உள்ள பகுதிகளில் கொசுவினால் மக்களுக்கு தொற்று நோய்கள் ஏதும் ஏற்படாமல் பாதுகாக்கும் விதமாக 26 டெங்கு கொசு ஒழிப்பு பணியாளர்கள் நியமனம் செய்யப்பட்டும் மற்றும் தமிழ்நாடு மாநில சட்ட மன்ற தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலில் இருந்ததால் ஏற்கனவே பணி மேற்கொண்ட தனியார் ஒப்பந்ததார்க்கு 3 மாதத்திற்கு (01.04.2026 முதல் 30.06.2026 வரை) பணி ஆணை வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் பருவ மழைக்காலங்களில் நோய் தொற்றுக்கள் ஏதும் பரவாதவாறு பொதுமக்களை பாதுகாத்திடவும் மற்றும் பொது சுகாதாரப் பிரிவின் அவசர அவசியம் கருதி 26 பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்திடவும் அவர்களுக்கான ஊதியம் நாள் ஒன்றுக்கு ரூ.646/- என்ற வீதம் ஈரோடு மாவட்ட ஆட்சியர் அவர்களின் குறைந்தபட்ச ஊதியம் மாவட்ட அரசிதழில் தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையில் ஊதியம் வழங்கிடவும் 3 மாத காலத்திற்கு (01.07.2026 முதல் 30.09.2026 வரை) புதிதாக ஒப்பந்தபுள்ளி கோரி பணி மேற்கொள்ளவும் ஆகும் செலவினம் ரூ.18.50/- இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க எண். 1176/ 2024/ எச்1

அலுவலக குறிப்பு:-

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண் : 401

தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது

பொருள் எண்.06

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட 18 வார்டுகளில் உள்ள வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்களில் வசிக்கும் பொதுமக்களுக்கு கொசுக்களால் ஏற்படும் தொற்றுநோய்களை கட்டுப்படுத்தும் விதமாக DBC எனப்படும் கொசு ஒழிப்பு பணியாளர்களை வைத்து டெங்கு போன்ற கொள்ளைநோய்கள் ஏற்படாதவாறு கொசு ஒழிப்பு பணியில் ஒப்பந்ததாரர் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன் தொடர்ச்சியாக 01.01.2026 முதல் 31.03.2026 வரை ஆகிய மூன்று மாதங்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட ஊதியத்தின் படி பொது சுகாதார பிரிவின் அவசர அவசியம் கருதி ஒப்பந்த நீட்டிப்பு செய்வதற்கும் மேலும் 01.04.2026 முதல் 30.06.2026 வரை ஆகிய மூன்று மாதங்கள் தமிழ்நாடு மாநில சட்டமன்ற தேர்தல் அறிவிப்பு செய்து தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலில் உள்ளதால் புதிதாக ஒப்பந்தப்புள்ளி ஏதும் கோரிட இயலாத நிலையில் ஏற்கனவே ஒப்பந்த அடிப்படையில் பணி மேற்கொள்ளப்பட்டு வரும் திரு.V.ஜெயராஜ் ஒப்பந்ததாரருக்கு ஏற்கனவே உள்ள ஊதிய விகிதத்தின் படி நீட்டிப்பு செய்து பணி உத்தரவு வழங்கப்பட்டதற்கு மன்றத்தின் பின்னேர்பிற்கு வைக்கப்படுகிறது.

(ந.க.எண்.1176/2024/எச்1)

அலுவலக குறிப்பு:-

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண் : 402

தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது

<u>பொருள் எண்.07</u>

ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் மாவட்ட சுகாதார அலுவலர் அவர்களின் கடிதம் மற்றும் ஆய்வுகூட்ட அறிவுரைகள் நாள்.24/10/2025 படி புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் எதிர் வரும் வடக்கிழக்கு பருவமழையினை எதிர் கொள்ளும் விதமாக பொதுமக்களுக்கு கொசுக்கள் மூலம் பரவும் நோய்களை கட்டுப்படுத்திடும் விதமாக INDOOR FOGGING MACHINE 2 எண்ணிக்கை, GAS CYLINDER 30 எண்ணிக்கை மற்றும் MALATHION TECHNICAL 30 லிட்டர் எண்ணிக்கை ஆகிய பொருட்களை உடனடியாக பெற்று பணிகளை மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது. நகராட்சி விதிகள் எண் 57(7) ன் கீழ் பொது சுகாதார பிரிவின் அவசர அவிசியம் கருதி மருந்து மற்றும் புகை மருந்து தெளிக்கும் இயந்திரங்கள் தமிழ்நாடு மெடிக்கல் சர்வீஸ் கார்ப்ரேசன் லிமிடெட்-ன் அங்கீகாரம் பெற்ற Adithya Agencies (ஆதித்யா ஏஜென்சிஸ்) என்னும் நிறுவனத்திடம் நேரடி கொள்முதல் செய்ய பணி உத்தரவு வழுங்கப்பட்டு பணிகள் மேற்கொண்டமைக்கான செலவினத் தொகை ரூ.84,276/- நகர் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

ந.க எண். 2514/2025/எச்1

அலுவலக குறிப்பு:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண் : 403

தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது

<u>**பொருள் எண்.08**</u>

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவின் கீழ் திடக்கழிவு மேலாண்மை பணிகளை தூய்மை இந்தியா திட்டத்தின் வாயிலாக நமது நகராட்சியில் திடக்கழிவுகளை கையாளுதல் திறன் அடிப்படையில் STAR RATING மதிப்பீடுகள் Ministry of Housing and Urban Affairs, Government of India வழங்குகிறது.

மூன்று நட்சத்திர அங்கீகாரம் (3 STAR RATING) பெறுவதற்கு 2 தினசரி நாளிதழில் திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நகராட்சி (ODF++) மற்றும் குப்பையில்லா நகராட்சி (GFC) என விளம்பரம் செய்ய மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலகம் மூலம் விளம்பரம் செய்யவும் மேலும் 18 வார்டுகளில் உள்ள பொது மற்றும் கட்டணக் கழிப்பிடங்களில் விழிப்புணர்வு பதாகைகள் வைக்க ஆகும் செலவினம் ரூ.50,000/-ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்.1206/2019/எச்1)

அலுவலக குறிப்பு:

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மூன்று நட்சத்திர அங்கீகாரம் (3 STAR RATING) பெறுவதற்கு 2 தினசரி நாளிதழில் திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நகராட்சி (ODF++) மற்றும் குப்பையில்லா நகராட்சி (GFC) என மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலகம் மூலமாக விளம்பரம் செய்தமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண் : 404

தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது

பொருள் எண்.09

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.DMA/1196/2026-SBM2, நாள்:15.03.2026-ன் படி எதிர்வரும் சட்டமன்றத் தேர்தல்கள் மற்றும் தேர்தல் நடத்தை விதிகள் அமல்படுத்தப்படுவதன் காரணமாக, புன்செய்ப் புளியம்பட்டி நகராச்சியில் திடக்கழிவு பணிகள் மேற்கொளப்பட்டு வரும் M/S LD MANPOWER SOLUTION எனும் தனியார் ஒப்பந்த நிறுவனத்தின் ஒப்பந்தம் 31.05.2026-வுடன் முடிவடைகிறது. இந்நிலையில் புதிய ஒப்பந்தப்புள்ளிகளைக் கோருவதோ அல்லது புதிய செயல்முறையைத் தொடங்குவதோ உகந்ததல்ல எனவும் ,அத்தியாவசியமான திடக்கழிவு மேலாண்மை பணிகளில் ஏற்படும் இடையூறுகள் தவிர்க்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளத்தன் படி 31.05.2026-வுடன் முடிவடையும் மேற்கண்ட ஒப்பந்த நிறுவனத்தின் ஒப்பந்தத்தினை 01.06.2026 முதல் 30.06.2026 முடிய ஆகிய 1 மாதத்திற்கு மட்டும் ஏற்கனவே பணிகள் மேற்கொண்டு வரும் தனியார் ஒப்பந்த நிறுவனத்திற்கே ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் தொகை ரூ.6240-/)1 டன்னுக்கு (என்ற விகிதத்திலேயே ஒரு மாதத்திற்குமட்டும் ஒப்பந்த காலத்தை நீட்டிப்பு செய்து பணி உத்தரவு வழங்கப்பட்டதற்கு மன்றத்தின் பின்னேர்பிற்க்கு வைக்கப்படுகிறது.

(ந.க.எண்.1316/2021/எச்1)

அலுவலக குறிப்பு:

அ) மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

தீர்மான எண் : 405

தீர்மாணம் : அனுமதிக்கப்படுகிறது

பொருள் எண்.10

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான கழிவுநீர் வாகனம் (TN 36 AZ 7382) பழுது நீக்கம் செய்யும் பணிக்காக 06.03.2026 அன்று விலைப்புள்ளி கோரப்படத்தில் கீழ்கண்டவாறு இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

வரப்பெற்ற கீழ்கண்ட இரண்டு விலைப்புள்ளிகளை சுவர்ந்தாய்வு செய்யப்பட்டதின் அடிப்படையில் இரண்டு விலைப்புள்ளிகளில் விலை விகித பட்டியில் உறை 06.03.2026 அன்று வரப்பெற்ற ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் திறக்கப்பட்டு மதிப்பிட்டுடன் ஒப்புநோக்கியத்தில் கீழ்கண்டவாறு ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டது.

வ. எண்	பணியின் பெயர்	மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில்	ஒப்பந்ததாரர் பெயர்	விழுக்காடு
1.	**பொதுநிதி 2025-2026** புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான கழிவுநீர் வாகனம் (TN 36	ரூ.1.50 இலட்சம்	முருகன் ஆட்டோஸ், மேட்டுப்பாளையம்	4.33% மதிப்பீட்டு விலை விகிதத்தைவிட அதிகம்

	AZ 7382) பழுது நீக்கம் செய்யும் பணி.		ஸ்ரீ பாக்கியலட்சுமி மோட்டார்ஸ், ஈரோடு	– 0.33 % மதிப்பீட்டு விலை விகிதத்தைவிட குறைவு

வரப்பெற்ற விலைப்புள்ளியை ஒப்புநோக்கியதில் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட –0.33% குறைவாக வழங்கியுள்ள **ஸ்ரீ பாக்கியலட்சுமி மோட்டார்ஸ், ஈரோடு** அவர்களின் விலைப்புள்ளியை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வேண்டடப்படுகிறது.

(ந.க.எண்.19/2025/எச்1)

அலுவலக குறிப்பு :–

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண் : 406

தீர்மாணம் : அனுமதிக்கப்படுகிறது

பொருள் எண்.11

இந்நகராட்சியில் பொது நிதி 2025–2026–ன் கீழ் புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான பொது சுகாதார பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் TATA ACE (TN 36 BU 6426) வாகனத்திற்கு பழுது நீக்கம் செய்து வாகன தகுதி சான்று பெறும் பணிக்காக 12.02.2026 அன்று கீழ்கண்டவாறு இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

வ.எண்	பணியின் பெயர்	மதிப்பீட்டு தொகை	ஒப்பந்ததாரர் பெயர்	தொகை ரூ
1.	புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான பொது சுகாதார பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் TATA ACE (TN 36 BU 6426) வாகனத்திற்கு பழுது நீக்கம் செய்து வாகன தகுதி சான்று பெறும் பணி.	ரூ.0.30 இலட்சம்	முருகன் ஆட்டோஸ், மேட்டுப்பாளையம்	1.08% மதிப்பீட்டு விலை விகிதத்தைவிட அதிகம்
			ஸ்ரீ பாக்கியலட்சுமி மோட்டார்ஸ், ஈரோடு	0.99% மதிப்பீட்டு விலை விகிதத்தைவிட குறைவு

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை ஒப்புநோக்கியதில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.99% குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திருமிகு.ஸ்ரீபாக்கியலட்சுமி மோட்டார்ஸ், ஈரோடு அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்.3376/2025/எச்1)

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண் : 407

தீர்மாணம் : அனுமதிக்கப்படுகிறது

பொருள் எண்.12

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு குடிநீர் விநியோகம் மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்ள வெளிக்கொணர்வு முகமை மூலம் 18 பணியாளர்களை விநியோகம் செய்தல் பணிக்கு கடந்த 16.12.2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு 06.02.2026 அன்று பணி ஆணை வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி பணி காலம் 30.06.2026 உடன் முடிவடையவுள்ளதால் 01.07.2025 முதல் 31.07.2026 வரையுள்ள 1 மாத காலத்திற்கு நீட்டிப்பு செய்யவும், 01.08.2026 முதல் 30.11.2026 வரையுள்ள 4 மாத காலத்திற்கு புதிய ஒப்பந்தப்புள்ளி கோரவும் அதற்காகும் செலவினம் ரூ.19.40 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்.662/2025/இ1)

அலுவலக குறிப்பு :

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ)மேற்கண்ட பணிக்கான செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மான எண் : 408

தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது

பொருள் எண்.13

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களின் கடித ந.க.எண்.4202/2023/பி1 நாள்.20.01.2026ன் படி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகத்திற்கு EPSON–PS–530 ஸ்கேனர் ஒன்று புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி மூலம் கொள்முதல் செய்து வழங்க தெரிவிக்கப்பட்டது. அதன்படி பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம்–2023 பிரிவு–57ன் கீழ் ரூ.37,000/– மதிப்பீட்டில் பணி மேற்கொண்டு செலவிடப்பட்டதற்கு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

(ந.க.எண்.0080/2026/இ1)

அலுவலகக்குறிப்பு :–

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண் : 409

தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது

பொருள் எண்.14

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி பகுதிகளில் உள்ள மின்மோட்டார்கள், ஆழ்துளை கிணற்றின் மின்மோட்டார்கள், நகராட்சி கட்டிடங்களில் உள்ள மின்சாதனப் பொருட்கள், பொதுக்கழிப்பிடங்களில் உள்ள மின்சாதனப்பொருட்கள் ஆகியவற்றின் பழுதுகள் சரிசெய்யவும், ஜூன் 2026 முதல் செப்டம்பர் 2026 வரை உள்ள 4 மாத காலத்திற்கு பராமரிப்பு பணி மேற்கொள்ள ஏற்படும் செலவினத்தொகை ரூ.4.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்.596/2026/இ1)

அலுவலக குறிப்பு :

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ)மேற்கண்ட பணிக்கான செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மான எண் : 410

தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது

பொருள் எண்.15

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான பவானிசாகர் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள பிரதான குழாய்கள், வால்வுகள், தலைமை நீரேற்று நிலையத்தில் இருந்து வரும் பிரதான குழாய்கள், ஏர்வால்வுகள் ஆகியவற்றின் பழுதுகள் மற்றும் குழாய் உடைப்புகள் சரிசெய்யவும், ஜூன் 2026 முதல் மார்ச் 2027 வரை உள்ள காலத்திற்கு பராமரிப்பு பணி மேற்கொள்வதற்காக தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.4.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(ந.க.எண்.597/2026/இ1)

அலுவலக குறிப்பு :

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ)மேற்கண்ட பணிக்கான செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மான எண் : 411

தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது

பொருள் எண்.16

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள ஆழ்துளை கிணறு மற்றும் திறந்தவெளி கிணறு தண்ணீர் விநியோககுழாய்கள் பழுதுகள் மற்றும் குழாய் உடைப்புகள் சரிசெய்யவும், சின்டெக்ஸ் டேங்க் பழுது நீக்கம் மற்றும் பராமரிப்பு பணி மேற்கள்ளவும் ஜூன் 2026 முதல் நவம்பர் 2026 வரை உள்ள 6 மாதகாலத்திற்கு பராமரிப்புபணி மேற்கொள்ள ஏற்படும் செலவினத்தொகை ரூ.4.80 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்.598/2026/இ1)

அலுவலக குறிப்பு :

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ)மேற்கண்ட பணிக்கான செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மான எண் : 412

தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது

பொருள் எண்.17

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.DMA/512/2026–EA2 நாள்.16.02.2026ன் படி 15வது மத்திய நிதிக்குழு மானியம் 2021–2025ஆம் ஆண்டிற்கான Untied Grant–ன் கீழ் Construction of Storm Water Drain at SRT Backside Main Street, SRT Backside Street–5, SRT Backside Street–6 and Thiru.Vee.Kaa Joint Street in Punjai puliampatti Municipality பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. அதன் அடிப்படையில் மேற்கண்ட பணிக்கு 27.02.2026 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் முதல் அழைப்பில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

வ.எண்	பணியின் பெயர்	மதிப்பீட்டுத் தொகை	ஒப்பந்ததாரர் பெயர்	விழுக்காடு
1.	Construction of Storm Water Drain at SRT Backside Main Street, SRT Backside Street-5, SRT Backside Street-6 and Thiru.Vee.Kaa Joint Street in Punjai puliampatti Municipality	37.70 இலட்சம்	M/s.VBN Builderrs, Tiruppur	0.01% மதிப்பீட்டை விட குறைவு
			M/s.Vino Constructions Bhavanisagar	2.00% மதிப்பீட்டை விட அதிகம்

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை ஒப்புநோக்கியதில் மதிப்பீட்டு விலை விகிதத்தினைவிட 0.01% குறைவாக வழங்கியுள்ள M/s.VBN Builderrs, Tiruppur அவர்களின் ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

(ந.க.எண்.925/2025/இ1)

அலுவலக குறிப்பு :

அ) மன்றம் பதிவு செய்யலாம்.

தீர்மான எண் : 413

தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது

பொருள் எண்.18

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2025-2026-ன் கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.16, சேரன் இணைவீதி ராயல் நகர் பகுதியில் மழைநீர் வடிகால் கட்டுதல் பணிக்கு மாவட்ட ஆட்சித்தலைவர், ஈரோடு அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.9072/2025/அ3 நாள்.10.01.2026ன் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதன் அடிப்படையில் மேற்கண்ட பணிக்கு 28.01.2026 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் முதல் அழைப்பில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

வ.எண்	பணியின் பெயர்	மதிப்பீட்டுத் தொகை	ஒப்பந்ததாரர் பெயர்	விழுக்காடு
1.	புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.16, சேரன் இணைவீதி ராயல் நகர் பகுதியில் மழைநீர் வடிகால் கட்டுதல் பணி	ரூ.15.50 இலட்சம்	திரு.சி.சிதம்பரம், 281, சுல்தான் ரோடு, புன்செய்ப் புளியம்பட்டி	0.02% மதிப்பீட்டை விட குறைவு
			திரு.எம்.சுப்பிரமணியம், காவிலிபாளையம் ரோடு, காராப்பாடி	0.52% மதிப்பீட்டை விட அதிகம்

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை ஒப்புநோக்கியதில் மதிப்பீட்டு விலை விகிதத்தினைவிட 0.02% குறைவாக வழங்கியுள்ள திரு.சி.சிதம்பரம், 281, சுல்தான் ரோடு, புன்செய்ப் புளியம்பட்டி அவர்களின் ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

(ந.க.எண்.1085/2024/இ1)

அலுவலக குறிப்பு :

அ) மன்றம் பதிவு செய்யலாம்.

தீர்மான எண் : 414

தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது

பொருள் எண்.19

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2025–2026–ன் கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.16, சேரன் இணைவீதி மற்றும் வார்டு எண்.17, ஜெ.ஜெ.நகர் தென்வடல் தெரு பகுதியில் கான்கிரீட் சாலை அமைத்தல் பணி க்கு மாவட்ட ஆட்சித்தலைவர், ஈரோடு அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.9072/2025/அ3 நாள்.10.01.2026ன் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதன் அடிப்படையில் மேற்கண்ட பணிக்கு 28.01.2026 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் முதல் அழைப்பில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

வ.எண்	பணியின் பெயர்	மதிப்பீட்டுத் தொகை	ஒப்பந்ததாரர் பெயர்	விழுக்காடு
1.	இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.16, சேரன் இணைவீதி மற்றும் வார்டு எண்.17, ஜெ.ஜெ.நகர் தென்வடல் தெரு பகுதியில் கான்கிரீட் சாலை அமைத்தல் பணி	ரூ.5.50 இலட்சம்	திரு.சி.சிதம்பரம், 281, சுல்தான் ரோடு, புன்செய்ப் புளியம்பட்டி	0.06% மதிப்பீட்டை விட குறைவு
			திரு.எம்.சுப்பிரமணியம், காவிலிபாளையம் ரோடு, காராப்பாடி	1.14% மதிப்பீட்டை விட அதிகம்

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை ஒப்புநோக்கியதில் மதிப்பீட்டு விலை விகிதத்தினைவிட 0.06% குறைவாக வழங்கியுள்ள திரு.சி.சிதம்பரம், 281, சுல்தான் ரோடு, புன்செய்ப் புளியம்பட்டி அவர்களின் ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

(ந.க.எண்.1085/2024/இ1)

அலுவலக குறிப்பு :

அ) மன்றம் பதிவு செய்யலாம்.

தீர்மான எண் : 415

தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது

பொருள் எண்.20

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.402/2026/SS1–18 நாள்.06.01.2026ன் படி புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் TURIP 2025-2026 ன் கீழ் தார்சாலைகள் புதுப்பித்தல் பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.18484/2023/DO1 நாள்.08.01.2026ன் படி தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டதன் அடிப்படையில் மேற்கண்ட பணிக்கு 28.01.2026 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் முதல் அழைப்பில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

வ.எண்	பணியின் பெயர்	மதிப்பீட்டுத் தொகை	ஒப்பந்ததாரர் பெயர்	விழுக்காடு
	Improvement of BT Surface at SENGUNTHAPURAM SOUTH NORTH STREET 1 (060002R0050), Annamalaiyar Nagar South North Street-2 (North) (060003R0091), Annamalaiyar Nagar Main Street (060003R0089), ANNA NAGAR STREET - 1 (060003R0105), Annamalaiyar Nagar South North Street-1 (North) (060003R0090), Anna Nagar Street-1 (East - West) Part-2 (060003R0106), Annamalaiyar Nagar South North Street-3 (North)(060003R0092), Jawahar Street Annamalaiyar Nagar South Side Street (East West) 060003R0094), B. S. SUNDARAM STREET (060005R0047), Sowdamman Koil Cross Street - 1 (060006R0004), Sowdamman Koil Cross Street - 6 060006R0009), SOWDAMMAN KOIL ST (060006R0003), Sowdamman Koil Cross Street - 2 (060006R0005), Sowdamman Koil Cross Street - 3 (060006R0006), Sowdamman Koil Cross Street - 4 (060006R0007), Sowdamman Koil Cross Street - 5 (060006R0008), Maraimalai Adigal Joint Street-3 (060008R0335), Thiru.Vee.Kaa OHT Tank Street (East Side) (060008R0337), Maraimalai Adigal Joint Street-1 (060008R0333), Maraimalai Adigal Joint Street-2 (060008R0334), Maraimalai Adigal 1st Cross Street (West) (060008R0336), Thiru.Vee.Kaa OHT Tank Street (West Side) (060008R0338), Pudhu	160.00 இலட்சம்	M/s.VBN Builderrs, Tiruppur	0.01% மதிப்பீட்டை விட குறைவு
			M/s.Vino Constructions Bhavanisagar	3.02% மதிப்பீட்டை விட அதிகம்

	Colony Aadhiparasakthi Kovil - West Road-7(060012R0131), Pudhu Colony Aadhiparasakthi Kovil - West Road-2 (060012R0126), Pudhu Colony Aadhiparasakthi Kovil - West Road-3(060012R0127), Pudhu Colony Aadhiparasakthi Kovil - West Road-4 (060012R0128), Pudhu Colony Aadhiparasakthi Kovil - West Road-1 (060012R0125), Pudhu Colony Aadhiparasakthi Kovil - West Road-5 (060012R0129), Pudhu Colony Aadhiparasakthi Kovil - West Road-6 (060012R0130), Gandhi Nagar Mel Paguthi-East West Road (060013R0180), Gandhi Nagar Mel Paguthi-East Side -East West Road (060013R0179), Gandhi Nagar West Street -South North - 1 (East Side) (060013R0174), Gandhi Nagar West Street -South North - 3 (East Side Cross Street) (060013R0177), Gandhi Nagar West Street - South North - 2 (East Side) (060013R0175), Gandhi Nagar West Street -South North - 3 (East Side) (060013R0176), Gandhi Nagar Mel Paguthi -South North Street (060013R0178), PORIKARAR STREET (060014R0201), Porikarar Street - 2 (060014R0202), Onnappa Gounder Street (060015R0282), Avvai Joint Street (060016R0305), AVVAI STREET (060016R0300), Avvai Joint Street - Cheran Street Link Street (060016R0306) in Punjai Puliampatti Municipality			

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை ஒப்புநோக்கியதில் மதிப்பீட்டு விலை விகிதத்தினைவிட 0.01% குறைவாக வழங்கியுள்ள M/s.VBN Builderrs, Tiruppur அவர்களின் ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

(ந.க.எண்.1198/2025/இ1)

அலுவலக குறிப்பு :

அ) மன்றம் பதிவு செய்யலாம்.

தீர்மான எண் : 416

தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது

<u>பொருள் எண்.21</u>

இந்நகராட்சியில் பொது நிதி 2025-2026ன் கீழ் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான இடங்கள், அரசு புறம்போக்கு நிலங்கள் மற்றும் இதர தனிநபர் ஆக்கிரமிப்புகளை JCB இயந்திரம் மூலம் அகற்றும் பணிக்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண்.381 நாள்.03.02.2026ன் படி அனுமதியளிக்கப்பட்டுள்ளதன் அடிப்படையில், மேற்கண்ட பணிக்கு 24.02.2026 அன்று நடைபெற்ற விலைப்புள்ளியில் முதல் அழைப்பில் கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

வ.எண்	பணியின் பெயர்	மதிப்பீட்டு தொகை	ஒப்பந்ததாரர் பெயர்	விழுக்காடு
1.	இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான இடங்கள், அரசு புறம்போக்கு நிலங்கள் மற்றும் இதர தனிநபர் ஆக்கிரமிப்புகளை JCB இயந்திரம் மூலம் அகற்றும் பணி	ரூ.1.50 இலட்சம்	திருமதி.ந.புனிதவதி, அவினாசி ரோடு, நொச்சிக்குட்டை	0.01% மதிப்பீட்டை விட குறைவு
			திரு.சி.சிதம்பரம், 281, சுல்தான் ரோடு, புன்செய்ப் புளியம்பட்டி	2.00% மதிப்பீட்டை விட அதிகம்

வரப்பெற்ற விலைப்புள்ளியை ஒப்புநோக்கியதில் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 0.01% குறைவாக வழங்கியுள்ள திருமதி.ந.புனிதவதி, அவினாசி ரோடு, நொச்சிக்குட்டை அவர்களின் விலைப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்.0091/2026/எப்1)

அலுவலக குறிப்பு :

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண் : 417

தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது

(ஒம்)திரு.தி.ஜனார்த்தனன்,
நகர்மன்ற தலைவர்
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி

//உண்மைநகல்//

மேலாளர்
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி

02/06/26